(உ) இதைப்போக்க, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (அ), (இ) மற்றும் (உ) விபர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

Insurance scheme for handloom weavers.

* 178 Q.—Thiru C. RAMALINGAM (on behalf of Thiru K. SUBBU): Will the Hon. the Minister for Excise, Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether the Government have any proposal to introduce insurance scheme for handloom weavers in the co-operative sector; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு வி. வி. சுவாமிநாதன்: (அ) கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கும் நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத் திட்டம் ஏற்கனவே கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் மூலம் அமுல்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

(இ) தமிழகத்தில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருதி "கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்" என்ற பெயரில் ஒரு நல்வாழ்வுத் திட்டம் 15-11-1975 முதல் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர் எதிர்பாராமல் இறக்க நேரிட்டால் இறந்தவருடைய சேமிப்புக் கணக்கில் உள்ள தொகை மற்றும் வட்டியுடன் ஆயுள் காப்பீட்டு கழகத்திடமிருந்து ரூ. 3,000 உறுப்பினரின் வாரிசு பெறுவார்.

மேலும், ரூ. 2,000 கோ-ஆப்டெக்ஸ் வாரிசுதாரருக்கு வழங்கும். ஆக மொத்தம் ரூ. 5,000 வரை கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-15)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக 1973லிருந்து இதுவரை பயன்பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, 1-1-1986 வரை 1 லட்சத்து 12 ஆயிரம் நெசவாளர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

@ 350-351 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக ஆச்சிடப்பட்டுள்ளது.